# அரசைக் கண்டித்து யாழ். நகரில் ஒரு லட்சம் பேர் திரண்ட பேரணி

விலை ரூபா 6-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 புரட்டாதி 13 இதழ் 238
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 30- 09 - 1995

(யாழ்ப்பாணம்)
ஸ்ரீலங்கா அரசின் இனப் படுகொலைகளையும், நாகர் கோவில் மகாவித்தியாலய மாணவர்கள் விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்டதை கண்டித்தும், அரசின் கொடூர செயல்களை சர்வதேச சமூகத் துக்கு எடுத்து காட்டும் வகையிலும் ஒரு லட்சம் மக்கள் கலந்துகொண்ட மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணி நேற்று காலை யாழ். நகரில் நடைபெற்றது.

இப்பேரணிக்கான முழு

(5ம் பக்கம் பார்க்க)

## நேற்றைய பேரணியில் எழுப்பப்பட்ட கோஷங்கள்

(யாழ்ப்பாணம்)
நேற்றைய ஆர்ப்பாட்ட பேரணியில் எழுப்பப்பட்ட கோரிக்கைகள் வருமாறு:

* பள்ளிக் கூடங்கள் தான் புலிகளின் பாசறையா, நவாலியில் மனிதக் கொலை, நாகர் கோவிலில் மாணவர் கொலை, தமிழரின் உயிருக்கு இல்லையா விலை, மாணவரைக் கொல்வதால் மண்டியிடாது தமிழீழம், புலிகளை கண்டால் ஓடுகிறாய், பள்ளியிற்

(6ம் பக்கம் பார்க்க)



யாழ். நகரில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டவர்களில் வெகுஜன அமைப்பு ஒன்றிய முக்கியஸ்தர்களும், குண்டு வீச்சில் பலியான பாதிக்கப்பட்ட மாணவர்களின் படங்களையும் பிரேத பேழைகளையும் தாங்கிவரும் மாணவ மாணவிகளையும் படங்களில் காணலாம். படம்: 'தேவா'

# ★ விடுதலைப் புலிகளால் மட்டக்களப்பு கல்குடா பொலிஸ் நிலையம் தாக்கி அழிப்பு

# 23 பொலிஸார் பலி; 13 பேர் காயம்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு கல்குடா பொலிஸ் நிலையம் விடுதலைப்புலிகளால் தாக்கி முற்றாக அழிக்கப்பட்டது. இத் தாக்குதலில் 23 பொலிசார் கொல்லப்பட்டனர், 13 பேர் காயமடைந்தனர்.

ஒரு மோட்டர் உட்பட 20 துப்பாக்கிகள் விடுதலைப் புலிகளால் கைப் பற்றப்பட்டன.

[5-ம் பக்கம் பார்க்க]

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

[மட்டக்களப்பு]
கல்குடா பொலிஸ் நிலைய தாக்குதலின் போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

- ★ ரி 81 எல். எம். ஜி -1
- ★ அதற்குரிய றம் மகசின் -1
- ★ ஏ. கே. எல். எம். ஜி -1
- ★ அதற்குரிய லிங் -100
- ★ அதற்குரிய ரவைகள் -168
- ★ அதற்குரிய றம் மகசீன் -2
- ★ 60 மி. மீ மோட்டர் -1
- ★ அதற்குரிய ஸ்போக் -1
- ★ அதற்குரிய றம்போஸ்ட் -1
- ★ 60 மி. மீ. மோட்டர் வை போட் -1
- ★ அதற்குரிய பேஸ்ட் பிலேட் -1
- ★ 40 மி மீ: பிஸ்டல் -1
- ★ அதற்குரிய ஷெல்கள் -11

[5ம் பக்கம் பார்க்க]

## வடபகுதியில் பெரும் தாக்குதலுக்கு படையினர் தரப்பில் முஸ்தீபு

[லண்டன்]
இரு வாரங்களுக்குள் வடபகுதியில் பெரும் இராணுவ தாக்குதல் ஆரம்பிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. இதற்கான முன்னேற்பாடுகளில் படையினர் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களை உற்சாகப்படுத்தும் நோக்கில் அமைச்சர் ரத்வத்த நேற்று ராணுவ முகாம்களுக்கு விஜயம் செய்தார்.

(5ம் பக்கம் பார்க்க)

## வடபகுதி முகாம்களுக்கு ரத்வத்த விஜயம்

(கொழும்பு)
பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை முப்படைத் தளபதிகள் சகிதம் நேற்று வடபகுதி முகாம்களுக்கு விஜயம் செய்தார்.

காங்கேசன்துறை, பலாலி, ஏழாலை, மற்றும் தீவுப் பகுதி

(5ம் பக்கம் பார்க்க)

## மட்டு. இண்ணியடியில் ராணுவம் பலி; ஆயுதம் மீட்பு

[மட்டக்களப்பு]
மட்டு. இண்ணியடிப்பகுதியில் நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இராணுவ சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். ஆயுதங்கள் பலவும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

நேற்றுக்காலை 9-19 மணி

(5ம் பக்கம் பார்க்க)

## புல்மோட்டையில் இரு இராணுவம் காயம்

(திருமலை)
திருமலை புல்மோட்டைப் பகுதியில் வீதித் தடைகளை அகற்றச் சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலி

(6ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### பலவித பொருட்கள்

சகலவிதமான துவிச்சக்கர வண்டிகளும், உதிரிப்பாகங்களும், சிற்றிசன், சீகோ, கஷியோ கைக்கடிகாரங்கள், சுவர், மேசை மணிக்கூடுகள், சுடுதண்ணீர்ப்போத்தல், சகலவிதமானரோச்லைற், விளையாட்டுப் பொருட்கள் (Sport Goods) சகாய விலையில் பெற்றுக்கொள்ள! புதிய நகர பல்பொருள் வணிக நிலையம் (நியூ சிற்றி றேடர்ஸ்), 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (ஏ-5244)

### விசேஷ அன்ரனு

ரூபவாஹினி மட்ருஸ் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு விசேஷ T V அன்ரனு பொருத்துதல், பழுது பார்த்தல் T. V செட் றேடியோ மணிக்கூடுகளை திருத்திக் கொள்வதற்கு வீனஸ் டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284. ஸ்ரான்லி வீதி, (ஆரியகுளம் சந்தி) யாழ்ப்பாணம் கிளை கண்டி வீதி, சாவகச்சேரி. (எ-5319)

### பாலர் கற்கை நெறி

நவீன பாலர் கல்வித்துறையில் அனுபவம்மிக்க முன்னணி ஆசிரியரின் நேரடி வழிநடத்தலில் பல உதவி ஆசிரியரின் உதவியுடன் முன் எடுத்துச் செல்லப்பட இருக்கும் இக் கற்கைநெறியில் தங்கள் பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்ள முன்னதாகவே தொடர்புகொள்ளுங்கள். ஆரம்பம்: 03-10-95 பாரதி பாலர்கழகம், இலங்கை வங்கி வீதி, சாவகச்சேரி. (கி-1683)

### பிரம்புப் பின்னல்

சகல விதமான கதிரைகளும் உங்கள் வீட்டுக்கு வந்து பின்னித் தருபவர்கள்: ராஜன் பின்னலகம், 286, ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (ஏ-5343)

### கௌரவிப்பு
(கொழும்புத்துறை)

வியாபாரிமூலை இன்பசிட்டி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் ''மகாபாரதம்'' பற்றித் தொடர்ந்து இசைச் சொற்பொழிவு நிகழ்த்திய நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு பிரம்மஸ்ரீ சிவ வை. நித்தியானந்தசர்மாவுக்கு ''முத்தமிழருவி" என்னும் கௌரவ விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. -154

## அறிவித்தல்

### குரக்கன் கொள்வனவு

1995-ம் ஆண்டில் குரக்கன் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளை ஊக்கப்படுத்தும் வகையில் இம்முறையும் பசுமை வேளாண் சேவையால் ஒரு கிலோ தீட்டிய குரக்கன் ரூபா 26/- வீதம் கொள்வனவு செய்யப்படவுள்ளது. குரக்கன் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தங்களது குரக்கனை பின்வரும் இடங்களில் விற்பனை செய்யலாம்.

**வலிகாமம்**

பசுமை வேளாண் சேவை – நீர்வேலி
பசுமை வேளாண் சேவை – உடுவில்
பசுமை வேளாண் சேவை – சண்டிலிப்பாய்
பசுமை வேளாண் சேவை – கோண்டாவில்

**தென்மராட்சி**

பசுமை வேளாண் சேவை – கைதடி
பசுமை வேளாண் சேவை – சாவகச்சேரி
பசுமை வேளாண் சேவை – கொடிகாமம்
பசுமை வேளாண் சேவை – பளை

**வடமராட்சி**

பசுமை வேளாண் சேவை – பருத்தித்துறை

(ஏ-5335)

## அறிவித்தல்

கடந்த 15-09-95 அன்று நடைபெற்ற
வருடாந்தப் பொதுக்கூட்டத்தில்
எமது சங்கத்தின் பெயர்
**"வடமாகாண ஒப்பந்தகாரர் சங்கம்"**
என மாற்றப்பட்டுள்ளது.

மு. சி. சண்முகராசா,
செயலாளர்.

வடமாகாண ஒப்பந்தகாரர் சங்கம்,
கண்டி வீதி, யாழ்ப்பாணம்,

(ஏ-5337)

திரைப்பட ரசிகர்களுக்கும்,
கல்வி கற்கும் மாணவர்களுக்கும்

## ஓர் அறிவித்தல்

இதுவரை காலமும் திரைப்பட வெளியீட்டுப் பிரிவினால் வெளியிடப்பட்ட தமிழீழ தயாரிப்புகளான அனைத்து வீடியோ படங்களும், பாடசாலை மாணவர்களுக்கான அறிவியல், விஞ்ஞானம் சம்பந்தமான படங்களும், தமிழாக்கம் செய்யப்பட்ட ஆங்கிலப் படங்களும், நிதர்சன நிறுவனத்தின் மாதாந்த வீடியோ சஞ்சிகையான ஒளிவீச்சு, மற்றும் விவரணப் படங்களும் 02-10-95 முதல் திரைப்பட வெளியீட்டுப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

திரைப்பட வெளியீட்டுப் பிரிவு,
அருச்சுன சாலை,
யாழ்ப்பாணம்.

(ஏ-5338)

செப்ரெம்பர் 25 - அக்ரோபர் 25

## இது கற்பகச் சோலைக் காலம்; பனை நடுகை மாதம்.

## தமிழீழத்தைக் கற்பகச் சோலையாக்குவோம்

## பனை சில நாட்டி பயன் பல பெறுவீர்!

# "2,000 ஆண்டளவில் 2 கோடி பனைகள்"

கற்பகச்சோலை
பனை நடுகைத் திட்டம்

பனை, தென்னை வள
அபிவிருத்திப் பகுதி,
தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்,
தமிழீழம்.

(ஏ–5336)

நல்லூர் [stamp]

### மணிவாக்கு

நாம் மற்றவர்களுக்குச் செய்யவேண்டிய கடமை: பிறருக்கு உதவி புரிவதும் உலகுக்கு நன்மை செய்வதும் தான்.

- சுவாமி விவேகானந்தர்

## நமது நோக்கு

### மனித உரிமை

யாழ்ப்பாணத்தில் வாழும் சுமார் 8 லட்சம் மக்களையும் பாதுகாப்பது சிறிலங்கா அரசின் கடமை. அரசு அந்தப் பணியை செய்யாவிட்டாலும் அவர்களுக்கு எதிராகச் செயற்படாமலாவது இருக்கவேண்டும். இவ்வாறு லண்டனிலுள்ள மனித உரிமைக் கழகம் சிறிலங்கா அரசை வலியுறுத்திக்கேட்டுள்ளது.

இதேசமயம் அப்பாவி பொதுமக்களை பாதுகாப்பது அரசின் கடமை என்றும் அப்பாவி மக்கள் மீதான இராணுவ தாக்குதல்களுக்கு அரசே பொறுப்பேற்க வேண்டுமென்றும் சர்வதேச மன்னிப்புச்சபை அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இக்கடிதங்களும் கோரிக்கைகளும் கிடைத்திருந்த வேளையில் தான் நாகர் கோவிலில் அப்பாவிப் பள்ளி சிறுர்களை சிறிலங்கா அரசு கொன்று குவித்தது. சுமார் 40 குழந்தைகள் அங்கவீனப்பட்டுள்ளனர். இன்னும் 150 பேருக்கு மருத்துவமனையில் காயங்களுக்காக சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இக்கோரிக்கைகளும் கடிதங்களும் சிறிலங்கா அரசைப் பொறுத்தளவில் செவிடன் காதில் சங்கு ஊதியது போல்தான் இருக்கும் சிறிலங்கா அரசின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சரி ஒருவரான ரஞ்சன் விஜயரட்ண என்பவர் சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கைகள் குப்பைப் பெட்டிக்குள் போடுவதற்கே தகுதி உள்ளவை என்றும் அச்சபை தமிழர்களுக்காக பரிந்துரைக்கும் பக்கசார்பு கொண்டதென்றும் கூறியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது இந்த பௌத்த சிங்களப்பேரினவாதப் பின்னணியில் உள்ள சந்திரிகாவின் அரசு மனித உரிமைகள் அமைப்புக்களின் வேண்டுகோள்களுக்குச் செவிசாய்க்கும் என்று எதிர்பார்ப்பது வீணான எதிர்பார்ப்பாகும்.

சிறிலங்கா அரசின் இராணுவத்தீர்வு நடவடிக்கைகள் இவ்வாறு இருக்கும் என்று எதிர்பார்க்க எம்மால் முடியும். அச்செயற்பாட்டினால் வடக்கு கிழக்குப்பகுதிகளில் இரத்த ஆறு ஓடுகிறது இறந்தவர்களுக்கு நாம் ஒன்றும் செய்யமுடியாது. படுகாயமடைந்தவர்களுக்கு உடனடிச் சிகிச்சை செய்வதற்கும் காயம் அடைந்தோரைப் பராமரிப்பதற்கும் வடக்கு கிழக்கு மருத்துவமனைகளில் டாக்டர்களுக்கு பெரும் பற்றாக்குறை நிலவுகிறது. சத்திர சிகிச்சை செய்யக்கூடிய வைத்தியர்கள் மிகமிகக் குறைவு

வடக்கு கிழக்கு மருத்துவமனைகளில் சிங்கள டாக்டர்கள் வர மறுப்பதற்கான காரணம் நியாயமானதே ஆனால் தமிழ் டாக்டர்கள் சேவை செய்வதற்கு ஏன் வர மறுக்கிறார்கள்? அண்மையில் மருத்துவக்கல்லூரியில் கல்வி பயிற்சி முதலியவற்றை முடித்து வெளியேறிய 191 டாக்டர்களை சுகாதார அமைச்சு வடக்கு கிழக்கு மருத்துவமனைகளில் சென்று கடமையாற்றும்படி கேட்டதாம். தங்களுக்கு வடக்கு கிழக்குக்கு வெளியே எந்த இடத்திற்காவது நியமனம் வழங்கும்படியும் வடக்கு கிழக்குக்குத் தாம் செல்ல முடியாதென்றும் இந்த டாக்டர்கள் கூறிவிட்டனராம்.

இதற்கென்ன காரணம்? இந்த டாக்டர்கள் சுயநலநோக்குடன் தம் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும் சொகுசு வாழ்க்கை நடத்துவதற்குமே அவர்களது சுயநலமுள்ள பெற்றோரால் வளர்க்கப்பட்டவர்கள். அவர்களிடம் தாய்நாட்டுப் பற்றையோ மண்பற்றையோ எதிர்பார்க்கமுடியாது. ஆனால் அவர்கள் எங்களுடைய வரிப்பணத்தில் தம் கல்வியைக்கற்றனரென்றும் எமது மண்ணுக்கும் கடமை செய்யவேண்டிய கடப்பாடு உள்ளவர்கள் என்பதையும் மறந்துவிடக்கூடாது.

தமிழீழப் போராட்டத்தில் ஒவ்வொருநாளும் மக்களுக்கு காயங்கள் ஏற்படுகிறது அவர்களைப் பராமரிப்பதற்கு டாக்டர்கள் தேவை அந்தத்தேவையை தமிழ் டாக்டர்கள் பூர்த்தி செய்யாது வேறு யார் பூர்த்தி செய்வது? சிங்களப் பகுதியில் வேலை செய்தால் குண்டுச்சத்தம் கேட்காது, ஏவுகணைச் சத்தம் கேட்காது என்று கூறும் இவ் டாக்டர்கள் சிங்களப்பகுதியில் ஆனக்கலவரம் வெடித்தால் அவர் டாக்டர் என்பதற்காக பாதுகாக்கப்படமாட்டார் என்பதை அறிந்துகொள்ள வேண்டும். 1983 இனக்கலவரத்தின்போது முதல் தாக்கப்பட்ட வீடு பொறளையில் இருந்த மகப்பேறு நிபுணரின் வீடுதான். ஆகவே நான் உண்டு என் குடும்பம் உண்டு என்று வாழாது தமிழ் மக்கள் மீது சிறிலங்கா அரசு கட்டவிழ்த்து விட்ட யுத்தத்தில் காயமடைவோருக்கு சிகிச்சை அளிப்பதற்கு வெளிமாவட்டங்களில் தொழில் புரியும் டாக்டர்கள் முன்வரவேண்டும்.

உயிருக்கு ஆபத்து என்று கூறி வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சேவை செய்ய விரும்பாத டாக்டர்கள், இப்போது சேவை மனப்பான்மையோடு மனிதநேயத்தோடு இக்கட்டான நேரத்தில் கடமையல்ல சேவை செய்யும் டாக்டர்களின் முன் உதாரணத்தை மனதில் கொண்டு அவர்களைப்போல் சேவை செய்வதற்கு வடக்குக் கிழக்கு மருத்துவமனைகளுக்கு வருதல் வேண்டும். மனிதஉரிமை பேணாத அரசின் அடாவடித்தனத்தால் இன்னலுறும் தமிழ் மக்களுக்கு வைத்திய சேவை செய்ய மனிதநேய அடிப்படையில் தமிழ் டாக்டர்கள் முன்வரவேண்டும்.

★ வடமராட்சித் தாக்குதல்:

# பிரெஞ்சு மருத்துவகுழுவின் அறிவிப்பு: இலங்கை அரசுக்கு நெருக்கடி!

(மணிலா)

பாரிஸை மையமாகக் கொண்டு இயங்கும் எம்.எஸ். எவ். மருத்துவ உதவிக் குழு, வடமராட்சி விமானத் தாக்குதலில் பாடசாலைச் சிறுர்களும் பொதுமக்களுமாக 70 பேர் இறந்தும், 150க்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்ததாகவும் உண்மை நிலையை வெளி உலகிற்கு எடுத்துக் காட்டியமை, இலங்கை அரசுக்குப் பெரும் சங்கடத்தை ஏற்படுத்தி உள்ளதாகத் தெரியவருகிறது

இதேநேரம் இம்மருத்துவக் குழு பொதுமக்களுக்கு ஆதரவானதா? அல்லது விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானதா? எனச் சரிவர விளங்கவில்லை என இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்க விமர்சித்திருப்பதாக ஏ. எப். பி. செய்தி தெரிவித்தது,

நவாலியில் விமானத் தாக்குதலின்போது 70 பொதுமக்கள் பலியானபோது ஐ. சி. ஆர் சி. ஜெனீவாவில் அறிக்கை வெளியிட்டதற்கும் இப்படியான கண்டனம் எழும்பியதும் குறிப்பிடத்தக்கது

கே-சி

# வடமராட்சித் தாக்குதலுக்கு காரணம் கற்பிக்க ராணுவம் முயற்சி

(மணிலா)

கடந்தவாரம் நாகர்கோவில் பகுதியில் பொதுமக்கள் மீது விமானத் தாக்குதல் எதையும் தாம் மேற்கொள்ளவில்லை எனக் கூறிய இராணுவம், தற்போது அத்தாக்குதலை ஏற்றுக் கொண்டுள்ளது

இத்தாக்குதலில் பாடசாலை மாணவர்கள் உட்பட 70 அப்பாவிப் பொதுமக்கள் பலியாகினார்கள்.

இதுவரை இந்நிகழ்வு குறித்து மறுப்புத் தெரிவித்து வந்த இராணுவம், தற்போது இத்தாக்குதலுக்குப் பொறுப்பேற்றுள்ளபோதிலும் இறந்தவர்கள் அனைவரும் பொதுமக்களே என்ற உண்மையை ஏற்றுக்கொள்ளவில்லை.

யாழ்ப்பாணத்தில் கடற்புலிகளின் தளபதி லெப் கேணல் திலீபனின் 8ம் ஆண்டு நினைவு நிகழ்வில் புலிகள் கூட்டம் நடத்தியவேளையிலேயே, இராணுவம் தமது விமான ரோந்துப் பணியைத் துவக்கியதாகவும், அவ்வேளையில் பொதுமக்கள் கடற்புலித் தளத்திலாவது அல்லது அண்மைப் பகுதியிலாவது கூட்டம் நடத்தினார்களா என்பது பற்றிய தெளிவு இல்லாததால்தான் விமானப்படை இத்தாக்குதலை நடத்தியதாக சரத் முனசிங்க கூறுகிறார் எனவும் வெரித்தாஸ் தெரிவித்தது

வடமராட்சியில் அன்று பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்ததாகத் தங்களுக்குத் தவறான தகவல் கிடைத்ததாகவும், பாடசாலை சிறுர்கள் புலிகளின் குடும்பத்தினராகவும் இருக்கக்கூடும் எனவும் சரத் முனசிங்க கூறியுள்ளாராம்.

எவ்வாறாயினும் இராணுவம் தனது செயலுக்கு நியாயம் கற்பிக்கும் முறையில் தற்போது இந்நிகழ்வை விமர்சிப்பதாக ஆய்வாளர்களும், விமர்சகர்களும் கருத்து வெளியிட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

கே-சி

# பதவிவிலகக்கூடாது

## சந்திரிகாவுக்கு கோரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி பதவியில் தொடர்ந்து இருக்குமாறு, ஜனாதிபதி சந்திரிகாவை ஈ. பி. டி. பி. கட்சி கேட்டுள்ளது.

தமிழர் பிரச்சினைக்கு அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனைகளை நிறைவேற்றுவதற்கு, திருமதி சந்திரிகா ஜனாதிபதி பதவியில் இருந்து விலகாது தொடர்ந்திருந்து, பிரச்சினைகளைத் தீர்த்து வைக்குமாறு ஈ. பி. டி. பி. மேலும் கேட்டுள்ளது.

ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள இனப் பிரச்சினைத் தீர்வுக்கான யோசனைகளுக்கு, தமிழ்க்கட்சிகள் நான்கு ஆதரவு தெரிவித்துள்ளன. ஈ.பி ஆர் எல் எவ் மாத்திரம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது

ம-சி

வன்செயல் பாதிப்பு:

# தலா 50 ஆயிரம் ரூபா 132 பேருக்குவழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் வன்செயல் நடவடிக்கையின் போது கொலைப்பட்டோருக்கான மரணக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளன.

சுமார் 132 பேருக்கு மட்டுமே இவ்நஷ்டஈட்டு தொகை வழங்கப்பட்டுள்ளதாக யாழ் செயலக உதவி திட்டப்பணிப்பாளர் எஸ். மகாலிங்கம் தெரிவித்தார்

வன்செயலின் போது கொல்லப்பட்டோருக்கான கொடுப்பனவாக 50, 000 ரூபா காசோலைகள் அவரவர் வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். 170-சி

## விளக்கு வெளிவந்தது

(யாழ்ப்பாணம்)

விளக்கு சஞ்சிகையின் ஆவணி - புரட்டாதி இதழ் வெளிவந்துள்ளது நல்லாசிரியர் என்னும் ஆசிரியத் தலையங்கத்துடன் கல்விப்புலம் சார்ந்த கட்டுரைகள், சிறுகதை, கவிதைகள் என்பனவற்றையும் தாங்கி இந்த இதழ் வெளிவந்துள்ளது. 'விருத்தி பெறும் விஞ்ஞானங்கள்" என்ற திரு ச. ரவீந்திரநாதனின் கட்டுரையும், பேராசிரியர் பே. கனகசபாபதியின் இவர்களுக்குத் தனியாக என்ற கட்டுரையும் வெளியாகியுள்ளது.

சென்ற ஆண்டில் உலக ஆசிரியர் நாளை முன்னிட்டு விளக்கு நடத்திய சிறுகதைப் போட்டியில் 3வது பரிசைப் பெற்ற பரந்தன் இந்து ம வி ஆசிரியர் செல்வி தயா பொன்னையா [நிதர்சனா] வின் தழும்புகள் என்ற சிறுகதை இந்த இதழை அலங்கரிக்கிறது. திரு சொக்கனின் அநுபவத் தொகுப்பான ''தொடக்கப்பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை, ஷ, அமனஸ் வீலியன் குழந்தைகள் வாழ்க என்பன இந்த இதழிலும் தொடர்கிறது.

இவற்றுடன் நெடுந்தீவு, மகேசன் ''போத்தகம் பத்திரம்,'' ஆதிரை இராஜரட்னத்தின் ''அகல்விளக்கு'' எனும் கவிதை. பதில், வாசகர் கண்ணோட்டம் ஆகியனவும் இடம் பெற்றுள்ளன. சி

### எல்லையில் கதியால் நடுவது பற்றி

ஆண்டவை செய்கின்றதெங்கள்
'அருள்ஜோதி' அம்மையாருக்கு
வடக்கிருந்து வாழுகின்ற
வலைல கரங்கள் எழுதுவது

பொருளிழந்து போனாலும்-நாம்
புலம் விட்டுப் போகவில்லை
உரமின்றி இருந்தாலும்
உணவுப் பயிரிங்கு வாடவில்லை

முன்னேறி பாய்ந்து வந்த
முறமோக்காளரே - அம்மா!
கால்களில் 'நெரிவு' இருக்கும்
கவனமாய் பத்தியமிடு

மழைகளுடன் மோதிய - உங்களின்
'மன்னனொருவன்' இருப்பிழந்து போனான்
வியூகமமைத்த தளபதியும்
விதி முடிந்து போனான்

தமிழருடன் மோதுவதென்பதை
தர்மமுடன் மோதுவதாய்
அகராதியில் நீங்கள்
அடையாளப் படுத்துங்கள்

வாழ்த்துகள் அனுப்பிய கைகள்
வாழ திருக்கா தங்கே
'அனுதாபம்' அனுப்பு முன்னர்-உன்
ஆதுக்கப் பிடி தளர்த்து

பிறகென்ன? வேறொன்றில்லை
பேசவிரும்பின் மேசைக்கு வருக
பேரத்தை விட்டு பேசுவோம்
எல்லையில் கதியால் நடுவது பற்றி

நா. கண்ணன்

# வடமராட்சி தாக்குதலில் பாதிக்கப்பட்ட அனைவரும் பொதுமக்களே; புலிகளல்ல

## எம். எஸ். எவ். பொறுப்பதிகாரி பேட்டி

பிரான்சை சேர்ந்த எம். எஸ். எவ் சர்வதேச வைத்தியக்குழுவின் வடமராட்சிக்கிளைச் செயலகம் கடந்த 1 வாரத்தில் வடமராட்சியில் நடைபெற்ற ஸ்ரீலங்கா விமானப்படையின ரின் குண்டுவீச்சு மற்றும் பலாலி இராணுவ முகாமில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலால் உயிர் இழந்த, படுகாயமடைந்த நிரந்தர பாதிப்புற்ற பொதுமக்களின் நிலையினை நேரில் கண்டும் அவர்களுக்கு வைத்திய உதவி புரிந்துள்ளதுடன் கொழும்பிலுள்ள தமது தலைமை அலுவலகத்தினூடாக வடமராட்சியில் இடம்பெற்ற அட்டூழியங்களின் போது பாதிப்புற்றவர்களின் மரணமடைந்தவர்களின் நிலை பற்றி சர்வதேச மன்னிப்புச் சபையிடம் தெரிவித்து உலகமே அறியும் வண்ணம் செய்துள்ளது.

இவ்வாறான மனிதநேயம் படைத்த, திருமதி மரீஸ் அம்மையார் தலைமையிலான எம். எஸ். எவ். வைத்தியக் குழுவினரை வடமராட்சியிலுள்ள [புலோலி பருத்தித்துறை] அவர்களது காரியாலயத்தில் வைத்து கண்ட பேட்டியின் விபரம் வருமாறு;

கேள்வி: வடமராட்சியில் அண்மையில் ஸ்ரீலங்கா படையினரின் அனர்த்தங்கள் பற்றி உங்கள் தலைமைச் செயலகத்தினூடாக சர்வதேச மன்னிப்புச் சபையிடம் தெரிவித்தீர்கள். இதனால் ஏதும் நன்மை உண்டா?

திருமதி. மரீஸ்:- அது எமது ஸ்தாபனத்தின் கடமையும் மனிதாபிமான நடவடிக்கையும் கூட. மேலும் நாம் அப்படித் தெரிவித்ததினால் சர்வதேச அரங்கில் உண்மை நிலை தெரியவும், நியாயம் கேட்கவும் ஒரு வாய்ப்பு ஏற்படலாம்.

கேள்வி:- இந்த அசம்பாவிதங்களுக்கு ஏதாவது பரிகாரம் உண்டா?

பதில்:- பொஸ்னியா, ஆப்கானிஸ்தான், தன்சானியா போன்ற நாடுகளில் இது போன்ற கொடூரச் செயல்கள் நடந்துள்ளன. நடந்து வருகின்றன. ஆனால் எமது கடமை உண்மை நிலைப்பாட்டை சர்வதேச அரங்கிற்கு அறிவிப்பதோடு சரி. ஆனால் அதற்கு அங்கு என்ன நடக்கிறது என்பது எமக்குத் தெரியாது.

கே:- இவ்வாறான செயலால் பாதிக்கப்படும் மக்கள் நிம்மதியாக வாழமுடியாதா?

ப:- இங்குள்ள எமது ஸ்தாபனம் கொழும்பிலுள்ள எமது அலுவலகத்திற்கும் ஜெனிவாவில் உள்ள தலைமைச் செயலகத்துடனும் தொடர்பு கொண்டு நிலைமைகளைத் தெளிவுபடுத்தன் பலனாக எமது சர்வதேச ஸ்தாபனமும், சர்வதேச மன்னிப்புச் சபையும் மக்களைக் காப்பாற்றும்படி ஸ்ரீலங்கா அரசைக் கேட்கும் இதனால் மக்களுக்கு ஓரளவு நிம்மதி கிடைக்க வழி ஏற்படலாம்

கே:- ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் அப்பாவி மக்கள் மீது மேற்கொள்ளப்படும் வன்முறைச் சம்பவங்களுக்குக் காரணம் என்னவாக இருக்கும் என கருதுகின்றீர்கள்?

ப:- அதுபற்றி எங்களுக்கு எதுவும் தெரியாது.

கே:- கடந்த வாரம் [22-09-95] வெள்ளிக்கிழமை வடமராட்சி கிழக்கில் இடம்பெற்ற வெவ்வேறு நிகழ்வுகளின் போது ஷெல், டிக்காபாக்களின் கண்மூடித்தனமான தாக்குதலால் பல மாணவர்கள், சிறுவர்கள், ஆசிரியர்கள் இறந்தும், பலர் படுகாயமடைந்த நிலையில் லொறிகளிலும், வாகனங்களிலும், அம்புலன்ஸ் வண்டிகளிலும் குவியலாக பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு வந்து சீமெந்து நிலத்திலும் கட்டில்களிலும், பிரேத அறைகளிலும் குவிக்கப்பட்டதைத் தாங்கள் நேரில் கண்ட போது என்ன தோன்றியது?

ப:- அவர்களுக்கு வேண்டிய வைத்திய உதவியை மட்டுமே செய்வது எமது கடமையாக இருந்தது. மேலும் இதுபற்றி நாம் ஒன்றும் கூற முடியாதுள்ளது.

> பேட்டி: 'சுபாஸ்'
> (வடமராட்சி நிருபர்)

கே:- இராணுவ நடவடிக்கைகளினால் மாணவர்களினதும், குழந்தைகளினதும் அறிவு வளர்ச்சியும், உளவியல் ரீதியான தாக்கமும் ஏற்படாதா?

ப:- உளவியல் ரீதியாக நிச்சயம் பாதிக்கப்படுவார்கள். ஆனால் எமது கடமை வைத்திய உதவி செய்வது மட்டுமே.

கே:- ஸ்ரீலங்கா அரசபடைகளால் பொதுமக்களுக்கு ஏற்பட்ட பேரிழப்புக்கள், பாதிப்புக்கள் போன்றவற்றைத் தாங்கள் நேரில் கண்டுள்ளீர்கள் இச்சம்பவங்களில் இருந்து மக்களைக் காப்பாற்ற தாங்கள் தங்கள் தலைமைச் செயலகத்துடன் தொடர்பு கொண்டு மக்கள் பாதிப்படையாமல் இருக்க ஏதாவது வழிவகைகளைப் பெற்றுத் தர முடியாதா?

ப:- தாக்குதல், இழப்புகள் பாதிப்புகள் பற்றி எமது தலைமைச் செயலகத்திற்கு மனிதநேயத்துடன் தெரிவிப்பதும், வைத்திய பணியைப் புரிவதும் தான் எமது பணி. ஆனால் இவைபற்றி எமது தலைமைச் செயலகம் விரும்பினால் ஏதாவது நன்மை செய்யலாம்.

கேள்வி:- சந்திரிகா அரசும் ஸ்ரீலங்கா இராணுவமும் நாகர் கோவில் மகா வித்தியாலய மாணவரின் படுகொலை தற்போது செய்தி ஸ்தாபனங்கள், பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் போன்றவற்றின் மூலம் விடுதலைப் புலிகளின் முகாம் மீது தாக்குதல் நடத்தியதாகவும் இறந்தவர்கள் அனைவரும் விடுதலைப் புலிகள் தான் என்றும் மாணவர்கள் பொதுமக்கள் அல்லவென்றும் தெரிவிக்கின்றது. இத்தாக்குதலில் பாதிக்கப்பட்ட அனைவரையும், இறந்தவர்களையும் காயமடைந்தவர்களையும் நீங்கள் நேரில் கண்டுள்ளீர்கள். எனவே இதுபற்றி என்ன கூறுகிறீர்கள்?

ப:- நாகர் கோவிலில் நடந்த தாக்குதல் பற்றி நாங்கள் நன்கு அறிவோம். எனினும் அது எமக்குத் தேவையில்லாதது. ஆனால் லொறிகள், அம்புலன்ஸ் வண்டிகள், ட்ராக்டர்கள் வாகனங்களால் கொண்டுவந்து குவிக்கப்பட்ட 12 வயதிற்குட்பட்ட 24 பாடசாலை சீருடை அணிந்த மாணவர்களின் சடலங்களையும், பொதுமக்கள் 20 பேர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு குற்றுயிரும் குறை உயிருமாக எடுத்து வரும்போது இறந்தவர்களின் சடலங்களையும், காயமடைந்த பாடசாலை மாணவர்கள் 150 பேரையும் காயமடைந்த பொதுமக்களையும் நேரில் கண்டோம்.

மேலும் 5 சிறுவர்கள் மற்றொரு தாக்குதலின் போது மரணமடைந்து சடலமாகவும் 5 சிறுவர்கள் உயிர் இழந்ததையும் எமது எம். எஸ். எவ். வைத்தியக் குழுவினர் கண்டனர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்கள் மாணவர்கள், சிறுவர்கள் பொதுமக்களே அன்றி விடுதலைப் புலிகள் அல்ல. இதை நாம் எமது தலைமைச் செயலகத்திற்கும், சர்வதேச மன்னிப்புச் சபைக்கும் தெரிவித்துள்ளோம்.

கே:- வடமராட்சியின் பிரதான வைத்தியசாலையாக உள்ள பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையின் போதிய வைத்தியர்கள் பற்றாக்குறை, மருந்துத்தட்டுப்பாடு, விசேட வைத்திய அறையின்மையால் யாழ். வைத்தியசாலைக்கு நோயாளர்கள், காயமடைந்தவர்கள் அனுப்படுகின்றனர். வல்லை வெளியூடாக யாழ் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போது நோயாளர் பெரும் பாதிப்படைவதுடன் உயிரிழப்பு ஏற்படுகிறது. இதற்கு தங்கள் ஸ்தாபனம் மூலம் ஏதும் உதவி செய்து மக்களைக் காப்பாற்றினால் என்ன?

ப:- இதில் உண்மையுண்டு நாம் எம்மால் இயன்ற அளவு எமது தொண்டினைச் செய்து நோயாளரை யாழ் வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதைக் குறைத்து இங்கேயே வைத்தியம் செய்கின்றோம். தலையில் படுகாயமடைந்த, இடுப்புக்கு கீழ் மோசமான காயம் ஏற்பட்ட, நினைவிழந்து உயிராபத்து ஏற்படலாம் என்ற முடிவுற்கு வந்த நோயாளரை மட்டும் யாழ் வைத்தியசாலைக்கு கண்ணாடி பாதுகாப்பு அமையில் வைத்து விசேட வைத்தியசிகிச்சைக்காக மட்டுமே அனுப்புகிறோம்.

வைத்தியர்கள் பற்றாக்குறை உள்ளது சேவை மனப்பான்மையுடன் வருபவர்களையும் ஊதிய அடிப்படையில் வேலை செய்ய விரும்புவர்களையும் இணைத்து சேவையாற்ற தயாராயுள்ளோம் இப்படி யாராவது முன்வரலாமே என்றும் தெரிவித்தார். -சி

# தேசிய பாதுகாப்பு நிதி செலுத்தும் இடங்கள்

(யாழ்ப்பாணம்)

சங்கானை, சண்டிலிப்பாய் வட்டங்களைச் சேர்ந்த பின்வரும் கிராம சேவகர் பிரிவுகளில் தேசியப் பாதுகாப்பு நிதியினைப் பெற்றுக்கொள்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இவ்விரு வட்டங்களிலும் இதுவரை கலந்து கொள்ளாத மக்களை இதில் கலந்துகொள்ளுமாறு நிதிப் பிரிவினர் கேட்டுள்ளனர்

சங்கானை வட்டத்தில்: சங்கானை மேற்கு, சங்கானை கிழக்கு, சங்கானை தெற்கு, மேற்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள், சங்கானை சிவபிரகாச மகாவித்தியாலயத்தில் நாளை ஞாயிறு காலை 8 30 மணி முதல் 12-00 மணி வரை செலுத்தலாம்.

வட்டு-வடக்கு, வட்டு-கிழக்கு, வட்டு மேற்கு, சித்தன்கேணி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் வட்டு-இந்துக் கல்லூரியில் நாளை ஞாயிறு பிற்பகல் 2-00 மணி முதல் 5 00 மணி வரை செலுத்தலாம்.

சண்டிலிப்பாய் வட்டத்தில்: நவாலி வடக்கு, நவாலி கிழக்கு, நவாலி தெற்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள், நவாலி சென் பீற்றேர்ஸ் றோ. க. த. க பாடசாலையில் இன்று காலை 8-30 மணி முதல் 5 00 மணி வரை செலுத்தலாம்.

சுதுமலை வடக்கு, சுதுமலை தெற்கு, உயரப்புலம், ஆனைக்கோட்டை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள், சுதுமலைச் சந்தி தேசிய பாதுகாப்பு நிதி தொடர்பகத்தில் நாளை ஞாயிறு காலை 8 30 மணி முதல் மாலை 5-00 மணிவரை செலுத்தலாம். -சி

# இராசி பலன்

30-09-1995

சனிக்கிழமை

[தமிழுக்கு புரட்டாதி 13]

ஷஷ்டி பி. ப. 1-03 வரை கேட்டை முன்னிரவு 10-23 வரை சித்தயோகம். இராகு காலம் காலை 9-02 முதல் 10-32 வரை, சுபவேளை மாலை 3-02 முதல் 4-32 வரை

மேடம்: மனச்சோர்வு, மறதி, அலைச்சல்.

இடபம்: தொழில் லாபம், நண்பர் வருகை, பயணம்.

மிதுனம்: துணிச்சலான செயல், பணவரவு, தெய்வ தரிசனம்.

கடகம்: சுகக்குறைவு, உறவினர் சங்கடம், பணமுடை.

சிங்கம்: காரியத் தடை, உடலசதி, குழப்பம்.

கன்னி: தொழில் சிறப்பு, பரோபகாரம், பாராட்டு.

துலாம்: வாக்குவாதம், அடிபணிதல், முயற்சித்தடை.

விருச்சிகம்: உல்லாசப் போக்கு, பெற்றோர் ஆசி, விருந்து.

தனுசு: வீண்செலவு, விரோத சிந்தனை, அவப்பெயர்.

மகரம்: சமயோசித முடிவு, இனசனநன்மை, பொதுப் பணி.

கும்பம்: கற்பனை, சுபகாரியம், எதிர்பாராத உதவி.

மீனம்: காரியத்தடை, சுகக் குறைவு, அவநிந்தை.

— ஜோஸ்யர்

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-09-30

சனி இரவு

8-02 மாவீரர் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி — தமிழ்க் கவிஞர் எழுதிய 'வீரத்தின் விழுமியங்கள்"

8-20 நேயர் கடிதங்கள்

8-30 செய்திகள்

8-40 கலந்துரையாடுவோம்

1995-10-01

ஞாயிறு காலை

7-02 மாவீர வணக்கம்

7-15 களத்தில் மலர்ந்தவை

7-30 செய்திகள்

7-35 பத்திரிகைச் செய்திகள்

8-00 மணி வரை களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழவானொலி நிகழ்ச்சி நிரல்

1995-09-30

சனி மாலை

5-01 சிந்தனைச் சிதறல்

5-02 எழுச்சி கீதம்

5-10 புதியவை

5-15 வேங்கையின் நெஞ்சம்

5 30 அறிவியல் வினாடி வினா

6-00 சிந்தனைக்குச் சில வினாடிகள்

6-02 [illegible]ன் தெரிவு

6-10 செய்திகள்

6-15 பாமாலை

## மொறட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப டிப்ளோமா விண்ணப்பம் கோரப்படுகிறது

(கொழும்பு)

மொறட்டுவ பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் 3 வருடகால முழு நேர தொழில் நுட்பவியல் தேசிய டிப்புளோமா கற்கை நெறிக்கான 1994/1995 அனுமதிக்கு தகுதி வாய்ந்த அபேட்சகரிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பாக 18-08-95 வர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளது விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய இறுதித்திகதி 06 10-95 ஆகும் க. பொ. த. (உ/த) பரீட்சையில் தூயகணிதம், இரசாயனவியல் பிரயோக கணிதம், பௌதீகவியல் ஒரே அமர்வில் 3 பாடங்கள் அல்லது 2 ற்கு மேற்படாத அமர்வில் 4 பாடங்கள் இருத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களை யாழ். செயலக நலன்புரிக் கிளையில் உள்ள வர்த்தமானியில் அறிந்து கொள்ளலாம். -சி

# அரச ஊழியர்களுக்கு இம்முறையும் 'போனஸ்'

(கொழும்பு)

அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு கடந்த வருடம் போல் இம்முறையும் 'போனஸ்' (ஊக்குவிப்புப்பணம்) வழங்கப்படவுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்: ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா சமர்ப்பித்த மேற்படி யோசனையை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

இதன்படி இலாபம் சம்பாதிக்கும் நிறுவனங்களின் ஊழியர்களுக்கு இரு மாத சம்பளம் அல்லது 10 ஆயிரம் ரூபா போனஸ்சாக வழங்கப்படும்.

இலாபம் ஈட்டாத நிறுவன ஊழியர்களுக்கு மாதம் 1 000 (ஆயிரம்) ரூபா போனஸ்சாக வழங்கப்படும் என்றும் எனினும் திறைசேரி இதற்குப் பணம் வழங்க மாட்டாது என்றும் தெரிவித்தார். க-சி

## வடமராட்சியில் மாணவர் மீதான

# மனித நாகரீகத்திற்கு அப்பாற்பட்ட மிகக் கொடூரமான தாக்குதல்

## சந்திரிகாவுக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி பகுதியில் கடந்த 22ம் திகதி விமானப் படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலானது மனித நாகரீகத்திற்கு அப்பாற்பட்ட மிகக் கொடூரமான தாக்குதலாகும் என ஜனாதிபதி சந்திரிகாவுக்கு யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் அனுப்பி வைத்த மகஜரில் தெரிவித்துள்ளது.

யாழ் நகரில் நேற்று நடைபெற்ற மாபெரும் கண்டனப் பேரணியின் போது ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பப்பட்ட இந்த மகஜரின் விபரம் வருமாறு;

யாழ்ப்பாண சமூகத்தின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும், பொது அமைப்புகளின் ஒன்றியமாகிய நாம், 29.9.95 ஆகிய இன்று மிகப் பெருமளவிலான எண்ணிக்கையில் எமக்கு இழைக்கப்படும் அநீதிகளைக் கண்டிக்கும் பேரணியை நடத்தி, பேரதிர்ச்சியையும், கண்டனத்தையும் தெரிவிக்கின்றோம்.

1995.9.22 வெள்ளிக்கிழமை பி.ப. 1.00 மணிக்கு வடமராட்சி கிழக்கிலுள்ள நாகர் கோவில் மகா வித்தியாலயத்தின் சுற்றுப் புறத்தில் தங்களது விமானப்படையின் விமானங்கள் முதலில் குண்டுகளை வீசின.

இப்பாடசாலை கிராமப்புறத்தில் அமைந்துள்ளது. நெருக்கமான வேறு கட்டிடங்கள் எதுவுமில்லை. வெள்ளைக் கொடியும் கட்டப்பட்டிருந்தது. தூரத்திலிருந்தே பாடசாலை என்பதை இலகுவில் இனங்காண முடியும்.

விமானங்கள் குண்டு வீசுவதை கவனித்த பாடசாலை அதிபர். மாணவர்களது பாதுகாப்பைக் கருதி மாணவர்களை பாதுகாப்புத் தேடி பதுங்குமாறு கேட்டுள்ளார். பாதுகாப்புத் தேடி பரிதவிப்புடன் அல்லலுற்ற வெள்ளைச் சீருடை அணிந்த மாணவர்கள் மீது பல தடவை விமானத் தாக்குதல் நடாத்தப்பட்டது. எவ்வித சந்தேகமுமின்றி மாணவர்கள் தான் என்பதை இனங்கண்டு தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

இம்மிருகத்தனமான தாக்குதலினால் 23 மாணவர்கள் உடல் சிதறி இறந்தார்கள். ஏராளமானவர்கள் படுகாயமடைந்தனர். கை கால்களை இழந்தவர்கள் ஏராளம்.

குண்டு வீச்சுகளைக் கவனித்து பிள்ளைகளை மீட்கச் சென்ற பெற்றோரும் பலியாகினர்.

மனித நாகரீகத்திற்கு அப்பாற்பட்ட இத்தாக்குதல், கொழும்பில் உள்ள தங்களது அதிகாரிகளினால் மறுக்கப்பட்டது. இக்கோரக்குற்றச் செயல்களை இருட்டடிப்புச் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும், அனைத்து உலகிற்கும் செய்திகள் எட்டியுள்ளமையை தாங்கள் அறிந்திருப்பீர்கள் என எண்ணுகின்றோம்.

இது ஒரு தனித்த நிகழ்வல்ல யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்மூடித்தனமான குரூரமான விமானத்தாக்குதல்கள் மற்றும் எறிகணை வீச்சுகளில் தொடர் நிகழ்வுகள் என்பது யாரும் புரிந்து கொள்ளக்கூடியதே. எவ்வகையிலும் இத்தாக்குதல்களை நியாயப்படுத்தமுடியாது.

ஏற்கனவே தங்களால் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு தடைகளால் பாதிப்புற்றுள்ள தமிழ் மக்கள் ஆகிய நாங்களும், எமது எதிர்கால சந்ததியும் தங்களது அத்துமீறிய இராணுவ நடவடிக்கைகளால் இன அழிப்பை எதிர்நோக்கியுள்ளோம்.

எனவே, தங்களது மேலான கவனத்திற்கு பின்வரும் கோரிக்கைகளை முன்வைக்கின்றோம்.

★ பாடசாலைகள் மற்றும் கல்வித்துறை சார்ந்த நிறுவனங்களின் இராணுவ முகாம்களை அமைத்தலும், மற்றும் அவற்றின்மீதான இராணுவத் தாக்குதல்களை உடன் நிறுத்தல்.

★ மக்கள் குடியிருப்புக்கள், தேவாலயங்கள், வைத்தியசாலைகள் ஆகியவற்றின் மீதான இராணுவத் தாக்குதல்களை உடன் நிறுத்துதல்.

★ மனிதநேய அடிப்படையில் மனித சகஜவாழ்வுக்கு ஏற்ப அன்றாட வாழ் நிலையில் சுமுகமான நிலைப்பாடுகளை தமிழர் வாழும் பிரதேசங்களில் தோற்றுவித்தல்.

★ தமிழ் மக்கள் எதிர் நோக்கும் இன அடிப்படையிலான பிரச்சனைகள் யாவற்றையும் தமிழ் மக்களுக்குள்ள சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தீர்வு காணுவதற்கான அனைத்து அணுகு முறைகளும் கையாளப்படுவதற்கு உடனடி செயற்பாட்டை தாங்கள் முன்னெடுப்பீர்கள் என நம்புகிறோம். 162-சி

# ஜெயலலிதா பதவி விலக வேண்டும்; தமிழகத்தில் மறியல் போராட்டம்

(சென்னை)

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவை பதவி விலக கோரி ஒக்டோபர் 27ம் திகதி அரச அலுவலகங்கள் முன்பு மறியல் போராட்டம் நடத்தப் போவதாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானம் எடுத்துள்ளது.

சென்னையில் அண்மையில் நடந்த 17வது மாநில மாநாட்டிலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்த மாநாட்டில் பல்வேறு இடங்களிலுமிருந்து ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை உள்ளாட்சி அமைப்புகள் கூட்டுறவு சங்கங்களுக்கும் தேர்தல் நடத்த வேண்டுமென்ற கோரிக்கை உட்பட பல கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்டத் தலைநகரங்களில் அக்டோபர் 10ம் திகதி மாபெரும் கூட்டுப் பேரணியை மாதி.மு.க. மற்றும் மார்க்ஸிய கட்சிகள் நடத்தவுள்ளன. கே-சி


யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

**பொருட்கள் வழங்குவதற்கான**

**கூறுவிலைகள்**

பின்வரும் பொருட்களை உடன் விநியோகிப்பதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கூறுவிலைகள் எதிர்வரும் 06-10-95 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | | | |
|---|---|---|---|
| (01) | குந்துசட்டி (Squatting Pan) | — பெரியது | - 100 எண் |
| (02) | குந்துசட்டி ( ,, ) | — நடுத்தரம் | - 100 எண் |
| (03) | குந்துசட்டி ( ,, ) | — சிறியது | - 100 எண் |
| (04) | சிமெந்து பக்கற் | | - 15 எண் |

மேற்படி பொருட்கள் ஒவ்வொன்றினதும் விலையைத் தனித்தனியாகக் குறிப்பிட்டு மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் நேரடியாகச் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன். ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் மூன்று தினங்களுக்குள் பொருட்களை விநியோகிக்க வேண்டும்.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
29-09-1995

[எ 5348]


### கைப்பற்றப்பட்ட

(1ம் பக்க தொடர்ச்சி)

★ ஏ. கே. ரக துப்பாக்கிகள் -16
★ அதற்குரிய மகசீன் -31
★ கைக்குண்டுகள் -3
★ நடுத்தர ரவைகள் -2100
★ 5 . 56 ரக ரவைகள் -18

உட்பட பல ராணுவ தளபாடங்கள் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன. -ரி

### அரசைக் கண்டித்து

(1ம் பக்க தொடர்ச்சி)

ஏற்பாடுகளையும் யாழ் மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் மேற்கொண்டது.

பேரணி நேற்றுக் காலை சரியாக 10-30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் இருந்து ஆரம்பமாகியது.

பேரணியின் முன்னே மதத் தலைவர்களும் அதனைத் தொடர்ந்து அரசாங்க தனியார் ஊழியர்கள் மற்றும் கல்வி அதிகாரிகளும், அவர்களைத் தொடர்ந்து மாணவர்களும், ஆசிரியர்கள், பொது மக்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்ட பேரணியில் எட்டு பிரேதபேழைகள் ஒன்றின் பின் ஒன்றாக தூக்கி வரப்பட்டது. நான்கு சிறிய பிரேதபேழைகளும், நான்கு பெரிய பிரேதபேழைகளும் மாணவர்கள் காவி வந்தனர்.

ஸ்ரீலங்கா அரச கல்விக்கூடங்களை மரணக் கூடங்களாக ஆக்கிவிட்டதைக் காட்டும் வகையிலேயே இப்பேரணியில் மாணவர்கள் பிரேதபேழைகளை எடுத்துவந்தனர்.

சின்னக் குருத்தைச் சிதைத்திட்ட மூடரே இன்னும் நீங்கள் புத்தரின் சீடரா? என்ற வாசகம் பொறிக்கப்பட்ட குண்டு வீச்சில் கால் துண்டிக்கப்பட்ட பள்ளி மாணவன் ஒருவனின் படம் பொறிக்கப்பட்ட சுலோக அட்டைகளை மாணவர்கள் பெருமளவில் கையில் தூக்கியவாறு பல்வேறு கோஷங்களை எழுப்பி சென்றனர்.

பேரணி முதலில் அகதிகளுக்கான ஐ நா செயலகத்தை அடைந்து அங்கு ஐக்கிய நாடுகள் சபைக்கான மகஜர் யாழ். வதிவிடப் பிரதிநிதி திரு. அசோக்குமாரிடம் கையளிக்கப்பட்டது.

தொடர்ந்து சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தை சென்றடைந்து அங்கு சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் ஜெனிவா தலைமையகத்திற்கான மகஜர் யாழ்' வதிவிடப் பிரதிநிதியிடம் கையளிக்கப்பட்டது.

இறுதியில் யாழ். செயலகத்திற்கு பேரணி சென்றடைந்தது. அங்கு அரசாங்க அதிபரிடம் மகஜர் கையளிக்கும் வைபவமும், பொதுக் கூட்டமும் இடம்பெற்றது.

ஜனாதிபதிக்கான மகஜரை யாழ் மாவட்ட வெகுஜன ஒன்றியத் தலைவர் சு. சிறில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போலிடம் கையளித்தார்.

கல்வி உயர் கல்வி அமைச்சருக்கான மகஜரின் பிரதியை மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலை மாணவன் செல்வன் சசிகுமார் கல்வி வலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளர் திரு. கே. கந்தசாமியிடம் கையளித்தார்.

இந்த மகஜர்கள் உரிய இடத்திற்கு உடனடியாக அனுப்பி வைக்கப்படும் என்று மேலதிக அரச அதிபரும், கல்விப்பணிப்பாளரும் உறுதியளித்தனர்.

இம்மகஜர்களின் பிரதிகள் எதிர்க்கட்சி தலைவர், சிறுவர் பாதுகாப்பு நிதியம் மற்றும் கொழும்பில் உள்ள வெளிநாட்டு தூதரகங்களுக்கும் அனுப்பி வைக்கப்படும். 170-95-ரி

### வடபகுதியில்

(1ம் பக்க தொடர்ச்சி)

இதேவேளை வட-கிழக்கு பருவமழை ஆரம்பிப்பதற்கு முன்னர் யாழ் குடாமீது தாக்குதல் நடாத்தப்படுவதாக இருந்தால் அடுத்த இரு வாரங்களுக்குள் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்படவேண்டும் என இராணுவ ஆய்வாளர் தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

யாழ் குடா மீது பாரிய தாக்குதலை மேற்கொள்ளுமுகமாக கிழக்கிலிருந்து 80 ஆயிரம் துருப்புக்கள் வாபசாகியுள்ளதாக தமிழ் அரசியல்வாதிகள் தெரிவித்துள்ளதாக பி பி. சி தெரிவித்தது, கரி

### வடபகுதி முகாம்

(1ம் பக்க தொடர்ச்சி)

உட்பட சில இடங்களுக்கு அவர் நேற்று விஜயம் செய்தார்

அமைச்சர் ரத்வத்தையுடன் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் மோஹான் சமரசேகர விமானப்படை தளபதி எயார் மார்ஷல் ஒலிவர் ரணசிங்க, கூட்டு நடவடிக்கைகள் தலைமைத் தளபதி மேஜர் ஜெனரல் ரோஹான் தளுவத்தை ஆகியோரும் மற்றும் உயர் இராணுவ அதிகாரிகளும் விஜயம் செய்தனர்.

வடபகுதி முகாம்களிலுள்ள படையினரை நேரில் சந்தித்து உரையாடிய அமைச்சர் பலாலி முகாமில் இடம்பெற்ற கூட்டத்திலும் உரையாற்றினார். ம-நீ-க-ரி

### மட்டு.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யளவில் கிண்ணியடி இராணுவ முகாமிலிருந்து துப்பரவு செய்யவந்த இராணுவத்தினர்மீது 600 மீற்றர் தூரத்தில் வைத்து விடுதலைப் புலிகள் இந்த தாக்குதலை நடத்தினர்.

இந்த தாக்குதலில் ரி-56 இரண்டுரக துப்பாக்கி - 1, அதற்குரிய மகசீன் - 4, நடுத்தர ரவைகள் 230, குண்டு துளைக்காத கவசம் - 4, கைக்குண்டு - 2 ஆகியன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. ரி

### விடுதலைப்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினம் இரவு 11-38மணியளவில் சிறிலங்கா பாதுகாப்பு படைகளின் அதிகூடிய பாதுகாப்பினைக் கொண்ட இந்த பொலிஸ் நிலையம் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது.

இந்த பொலிஸ் நிலையம் தாக்குதலுக்குள்ளாகி முப்பது நிமிடங்களின் பின்னர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டினுள் வந்தது.

இப் பொலிஸ் நிலையத்தை முற்றாகத் தாக்கி அழித்த விடுதலைப் புலிகள் அங்கிருந்த உழவு இயந்திரத்தையும் தகர்த்தனர்.

இப் பொலிஸ் நிலையம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தபோது பொலிஸ் நிலையத்திலிருந்து 300 யார் தொலைவிலுள்ள இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் உதவிக்கு வந்தனர். இவர்கள் மீதும் விடுதலைப் புலிகளின் மற்றுமொரு அணியால் கடும் தாக்குதல் நடத்தப்பட்டது, இதன்போது இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேத விபரம் தெரிய வரவில்லை.

இந்த வெற்றிகர தாக்குதலில் 2ம் லெப். அழகப்பன் அல்லது ஜீவா (செல்லையா மனோகரன் மட்டக்களப்பு) வீரவேங்கை செல்வம் அல்லது அரியரசன் (வைரமுத்து விக்கினேஸ்வரன் மட்டக்களப்பு) ஆகிய இருபோராளிகளும் வீரச்சாவடைந்தனர்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். ரி

> தடைகள் போட்டாய் தளர்ந்தோமா?
> தமிழர் நாங்கள் இரந்தோமா?

# இராணுவ நிதிநிலை அறிக்கையை இலங்கை அரசு உயர்த்தியுள்ளது

(கொழும்பு)

அரசாங்கம் இராணுவத்திற்கான நிதி நிலை அறிக்கை -யை 25 வீதத்தில் இருந்து 33. 9 வீதமாக உயர்த்தியுள்ளதாக இராணுவ உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் மீதுமேற்கொள்ள திட்டமிட்டிருந்த பாரிய தாக்குதலை முன்னிட்டு இவ்வாறு உயர்த்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி சந்திரிகா பதவி ஏற்ற வேளையில் யுத்தத்திற்கு முடிவு காண்பதும் பொருளாதார மேம்பாட்டை மேற்கொள்வதுமே தனது நிலைப்பாடு எனக் கூறிவந்தார்.

ஆனால் தற்போது இராணுவ வரிகளை உயர்த்தி வரும் நிதிநில அறிக்கையை விரிவுபடுத்துவதிலேயே தனது சிந்தனையை செலுத்தி வருவதுடன் விடுதலைப் புலிகள் மீது யுத்தம் புரிவதையே தனது உள்ளார்ந்த நோக்காக கொண்டிருப்பதையே காட்டுவதாக அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர். கரி

# பிள்ளையார் பால் அருந்தும் அற்புதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் பிள்ளையார் பால் அருந்தும் அற்புதங்கள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ், நகரின் பல பகுதிகளிலும் மற்றும் வடமராட்சி தென்மராட்சிப் பகுதிகளிலு[ம்] இந்த அற்புதம் இடம்பெற்று வருவதாகவும் பெருந்தொகையான மக்கள் நாள்தோறு[ம்] இதனை பார்வையிட்டு வரு[வ]தாகவும் எமது நிருபர்க[ள்] அறிவித்துள்ளனர்: 155-51-

## ஆனையிறவு ஷெல்லுக்கு மாணவர்கள் மயிரிழையில் உயிர் தப்பினர்

(சாவகச்சேரி)

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து தர்மங்கேணிப் பகுதி மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட ஷெல் வீச்சின் போது 'நூற்றுக்கணக்கான மாணவர்கள் தெய்வ தீனமாக உயிர் தப்பினர்.

நேற்று முன்தினம் முற்பகல் சுமார் 11 மணியளவில் ஆனையிறவு முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் தர்மங்கேணி பாடசாலைக்கு அருகில் விழுந்தன. இதன் போது அங்கிருந்த கேணிக்குள் சுமார் இருநூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் படுத்துக் கொண்டதில் உயிர்தப்பித்துக் கொண்டனர் தர்மங்கேணி ஜீ ரி. எம், எஸ் பாடசாலை மாணவர்களே இவ்வாறு மயிரிழையில் தப்பியவர்களாவர். மேற்படி பாடசாலைக்கு மிகவும் சமீபமாக ஷெல் ஒன்று விழுந்த போதிலும் தெய்வாதீனமாக அது வெடிக்கவில்லை வெடித்திருந்தால் பாரிய உயிர்ச் சேதம் அங்கு ஏற்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது

கடந்த மூன்று தினங்களாக ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து புதுக்காடு, தர்மங்கேணி, அதனை அண்டிய பகுதிகளை நோக்கி இராணுவத்தினர் கடும்ஷெல் தாக்குதல்களை குடியிருப்புகள் மீது மேற்கொண்டு வருகின்றன.

கடந்த 27ம் திகதி ஆனையிறவு இராணுவத்தினர்கண்டாவளை வீதியூடாக முன்னேறி பின்வாங்கினர் என்று தெரிவிக்கப்படுகிறது. 155-ரி

## பாதுகாப்பு நிதி கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

நீர்வேலி அத்தியார், யாழ். இந்துக் கல்லூரியில் நாளை 1ம் திகதி ஞாயிறு காலை 10 மணிக்கு நடைபெறும் கலந்துரையாடலில் யா/281 புத்தூர் மேனி யா/282 கதிரிப்பாய், யா/ 283 இடைக்காடு, யா/ 284 வளலாய், யா/285 அச்சுவேலி வடக்கு, யா/286 அச்சுவேலி தெற்கு, யா/287 அச்சுவேலி மேற்கு கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்கள் ஒவ்வொருவரைக் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்,

மேற்குறிப்பிட்ட கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள சனசமூக நிலையங்கள், கோவில்கள், ஐக்கிய நாணய சங்க[ங்]கள் ஆகியவற்றின் அங்கத்[த]வர்களில் ஒவ்வொருவரை பி. ப. 2-30 மணிக்கு மே[ற்] குறிப்பிட்ட இடத்தில் [நீர்]வேலி அத்தியார் யாழ். இ[ந்]துக் கல்லூரியில்] நடை[]பெறும் கலந்துரையாடலி[ல்] கலந்துகொள்ளுமாறும் வே[ண்]டப்படுகின்கின்றனர்; கி

## புல்மோட்டையில்

(1ம் பக்கத் தொடர்

கள் மேற்கொண்ட [தாக்]குதலில் இரு இராணுவ[த்தின]ர் காயமடைந்தனர் எ[ன] பாதுகாப்பு அமைச்சின் நட[வ]டிக்கை செயலகம் அறி[வித்]துள்ளது, கி-க

### நேற்றைய

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

குண்டை வீசுகிறாய், இன்வெறி அரசே படைகளை விலக்கு, வேலி வெட்டி வந்தவனே விலகிப்போ, செந்தமிழர் வாழுகின்ற சோலை சிங்களப் படைக்கு இங்கென்ன வேலை?, வெண் தாமரை வளர்க்க நினைப்பது குழந்தைகளின் குருதியிலா? புக்காரவை அனுப்பி வைத்த, புத்ததர்மமே பதில்கூறு போன்ற கோஷங் நேற்றைய ஆர்ப்பாட்டப் பேரணியில் எழுப்பட்டன. 170-மி

**"ஈழநாடு"**

**வாரமலர்**

**01-10-95 [ஞாயிறு]**

- ★ எழுத்தாளர் அ. செ. முருகானந்தத்தின் சிறப்புப் பேட்டி
- ★ ஆதிலட்சுமி சிவகுமார்
- ★ என். சண்முகலிங்கன்
- ★ மு. திருநாவுக்கரசு
- ★ மு. வே. யோ. வாஞ்சிநாதன்
- ★ ச. தியாகராசா
- ★ ஆத்மஜோதி முத்தையா

போன்றோரின் ஆக்கங்களுடன் சிறுவர், அரங்கம், பெண்கள் உலகம் போன்ற வழமையான அம்சங்களுடன் வெளிவருகின்றது.

**பத்து பக்கங்கள்**
**விலை ரூபா 6/-**

## தொழில்வங்கி பதிவுக்கட்டணம் அதிகரிப்பு

[யாழ்ப்பாணம்]

தமிழீழ நிர்வாக சேவையின் தொழில் வங்கியில் தொழில் அற்றோர் பதிவு செய்து கொள்வதற்கு இதுவரை பதிவுக் கட்டணமாக ரூபா 10 ரூபா அறவிடப்பட்டது.

காகிதாதிகளின் விலையேற்றம், அச்சு செய்வித்தலின் ஏற்பட்டுள்ள அதிகரித்த செலவு என்பவற்றைக் கருத்திற் கொண்டு இக்கட்டணம் நாளை (1-10-95) தொடக்கம் ரூபா 25 ஆக உயர்த்தப்பட்டுள்ளது என தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். வி

# "நீண்டகால யுத்தத்தை நடத்தி தமிழரை அழிப்பதே அரசின் திட்டம்"

## யாழ். பிரஜைகள் குழு தலைவர்

(யாழ்ப்பாணம்)

நீண்ட காலத்திற்கு யுத்தத்தை நடத்தி தமிழ் மக்களை அழிப்பதே அரசின் திட்டமாகுமென்று யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரும், பிரஜைகள் குழுத்தலைவருமான பேராசிரியர் குணரத்தினம் தெரிவித்தார்.

யாழ். நகரில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டப்பேரணியின் இறுதியில் யாழ். செயலக வளவில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத்" தலைவர் திரு. சூ. சிறில் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

இந்த அரசு ஆட்சிக்கு வந்தபின் நூற்றுக்கணக்கான பக்களை குண்டுவீசி கொலை செய்துள்ளது, பெரும் எண்ணிக்கையானோர் காயப்பட்டு தமது அவயவங்களை கூட இழந்த நிலையிலுள்ளனர்.

இந்த கொடூர சம்பவத்தை நாம் யாருக்கு எடுத்துக்கூறுவது: சர்வதேச உலகமும் கண்ணை மூடிக் கொண்டிருக்கிறது.

யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் அ. யோ. இம்மனுவல் அடிகளார் உரையாற்றுகையில், யாழ. குடாநாட்டை பல்வேறு வழிகளிலும் முற்றுகைக்குள்ளாக்கி தமிழினத்தை அழிப்பதே இந்த அரசின் திட்டமாகும்.

நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலய குண்டு வீச்சு தாக்குதலில் சுமார் 120க்கும் மேற்பட்ட அப்பாவி மக்களை இந்த அரசு பலி எடுத்தது.

தற்போது நாகர் கோவில் வித்தியாலயமாணவர்களையும் பலியெடுத்துள்ளது; ஆனால் இந்த தாக்குதல்களை மூ[டி] மறைக்கப் பார்க்கிறது அர[சு] இதை நாம் சர்வதேச உலக[த்]துக்கு எடுத்துக் காட்டுதல் ம[ிக] முக்கியமானதென்றும் தெ[ரி]வித்தார்.

நாகர்கோவில் மகாவித்தியாலய அதிபர் சி. மனோகரன் கண்ணீர் சிந்தியவாறு தமது பாடசாலை மாணவர்கள் குண்டுவீச்சினால் கொல்லப்பட்ட சம்பவத்தை விபரித்தார். இவரது உருக்கமான உரை பலரின் நெஞ்சை நெகிழ வைத்தது.

இந்துமதகுருமார் ஒன்றியத்தின் அமைப்பாளர் சிவஸ்ரீ இராஜேஸ்வரக் குருக்கள் யாழ். பல்கலைக்கழக மாணவ[ர்] பேரவை செயலாளர். ந. அ[] பிகைபாகன் ஆகியோரும் இ[க்] கூட்டத்தில் உரையாற்றினார்கள். 170-மி



நேற்றைய பேரணியின் இறுதியில் ஜனாதிபதிக்கான மகஜரை வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் திரு. சூ. சிறில் யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி தி. பத்தினியம்மாவிடம் கையளிப்பதையும், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் குணரத்தினம், வண. இம்மனுவேல் அடிகள், நாகர்கோயில் மகாவித்தியாலய அதிபர் திரு. எஸ். மனோகரன் ஆகியோர் யாழ். செயலகம் முன்பாக இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். படம்: 'தேவா'

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில், மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News paper at the General Postoffice Sri Lanka under Licenc Number B / 1633613